1995 ஏப்ரல் 10]

பெண்கள் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தருமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து அதை நிறைவேற்றித் தருவார்களா என்பதையும் மீண்டும் மறுபரிசீலனை செய்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான கருத்துரு இதுவரையில் பெறப்படவில்லை. அதை அனுப்புவதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்பாடு செய்தால், உயர்நிலைக் குழு அதை பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 295, திரு சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

295—

ஒண்டிப்புதூரில் உயர்நிலைப்பள்ளிக்கு ஆய்வுக் கூடம் கட்டுதல்

38598*—திரு. சிங்கை கோவிந்தராசு:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்காநல்லூர் தொகுதி, ஒண்டிப்புதூர் அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நல்ல நிதிநிலை அறிக்கையை தந்து, ஏழைகளின் இல்லத்திலும் உள்ளத்திலும் மகிழ்ச்சியை பொங்கவிட்டிருக்கக்கூடிய நமது தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் எல்லாத் துறைகளிலேயும் முன்னேற்றம் அடையும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிற இந்த நேரத்தில், ஏழை எளிய மக்களுக்காக கல்வித் துறைக்கு

அதிக அளவிலே நிதியை ஒதுக்கி சிறப்பாக ஆட்சி நடத்துகிற இந்த ஆட்சிக் காலத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கக்கூடிய ஆண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு இந்த ஆய்வுக்கூட அறையை கட்டித்தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளிலே ஆய்வுக் கூடங்கள் இருந்தால் தான் அங்கே சிறப்பாக கல்வி தர முடியும் என்று கருதி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் கேட்டிருந்த தொகையை விட இரண்டு மடங்காக தரவேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். அப்படி நிதி தரப்படுகிறபொழுது அரசின் இந்தப் பள்ளியில் ஆய்வுக்கூடம் கட்டுவதற்காக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

முற்பகல் 10-55

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பல்வேறு தனியார்களுடைய சலுகைகளோடு சுற்றுச் சுவர் கூட கட்டித் தருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, வரும் நிதி ஆண்டில் இதை உறுதியாக செய்து தர அமைச்சர் இறுதியான நடவடிக்கையை அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரும் ஆண்டில் இந்தப் பள்ளியைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 296, திரு. க. அர்ச்சுனன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

296—

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்த ஊனமுற்றோர் விவரம்

33233*—திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் உடல் ஊனமுற்றோர் எத்தனை பேர் பதிவு செய்துள்ளார்கள்?